**O.S.No. 225/2018**

**PW1 :** கிருஷ்ணவேணி தேதி 14.11.2025

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

4ம் பிரதிவாதி என் மாமனார் சொத்தில் எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான் ஆனால் பொது சொத்து என்பதால் அவரும் கூட்டு பங்குதாரர் என்பதால் அவரையும் தரப்பினராக சேர்த்துள்ளேன். என் மாமனார் சொத்தை 55 வருடமாக நாங்கள் அனுபவித்து வந்த பிறகு தற்போது பிரிவினை ஆகவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் செங்கோடகவுண்டரின் அனைத்து வாரிசுகளையும் சேர்க்கவில்லை என்பதால் இந்த வழக்கு பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. செங்கோடகவுண்டரின் சகோதரர் முத்துசாமிகவுண்டர் இறந்து விட்டார். முத்துசாமி கவுண்டரை இவ்வழக்கில் பிரதிவாதியின் சித்தப்பா துரைசாமிகவுண்டரின் மகன் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உறவு முறை சரியாக சொல்லவில்லை என்றால் சரியல்ல அது எனக்கு தெரியாது. முத்துசாமிகவுண்டரின் வாரிசுகள் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்பதால் இவ்வழக்கு பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் குடும்பத்தார் பல்வேறு தேதிகளில் பல்வேறு கிரையங்களாக குறிப்பிட்ட செக்குபந்தியுடன் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் 3 ஏக்கர் 97 சென்ட்டுக்குள் தான் கிரயம் வாங்கியுள்ளார்கள். பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய சொத்தில் என் கணவருக்கு உரிமை இல்லை என்றும் என் கணவர் சார்பாக நான் மேற்படி சொத்துகளில் பங்குரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி அவருடைய குடும்பத்தாரிடம் எழுதி வாங்கி கொண்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் தான் சொத்தை

அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் குடும்பத்திற்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து ஈரோடு முதல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.452/2015 என்ற வழக்கை 5 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்து கடந்த 29.2.2016 அன்று சமரச தீர்ப்பாணை பெற்று அதனை சிவகிரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து அவரவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகளை அவரவர் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் பட்டா எண் 1981 2450 ஆகிய பட்டாகள் பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. என் கணவர் வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்து ஆவணமாக தாக்கல் செய்திருந்தால் மேற்படி விவரங்கள் தெரிய வந்திருக்கும் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதி குடும்பத்தில் ஏற்படுத்தி கொண்ட பாகப்பிரிவினை மற்றும் நீதிமன்ற தீர்ப்பாணை பேரில் விளம்புகை கோராமல் தாக்கல் செய்திருக்கும் இவ்வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எனக்கு தெரிய வரவில்லை. லோகநாதன் என் பக்கத்து பூமிகாரர் என்றால் சரிதான். என் கணவர் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை குறைந்த விலைக்கு கேட்டார் என்றால் சரியல்ல. அவர் கிரையம் கொடுக்க மறுத்துவிட்டதால் நாங்கள் இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. காழ்புணர்ச்சியின் காரணமாக தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் விற்பனை நடவடிக்கையை முறியடிக்கும் எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருவது சம்பந்தமாக தொடக்க வேளாண்மை வங்கி வீரப்பம்பாளையத்தில் பயிர் கடன் வாங்கியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. ஏற்கனவே 4ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்த ஒரு பகுதியை ஈஸ்வரமூர்த்தி என்பவருக்கு கிரயம் கொடுதது விட்டார் என்றும் அந்த

விவரம் என் கணவருக்கு தெரியும் என்றால் சரியல்ல. 4 மற்றும் 5 முதல் 8 பிரதிவாதிகள் பாகம் பிரித்த விவரம் என் கணவருக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. அவர்களுக்கு தனிப்பட்ட சொத்தில் உரிமை கோர எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. என் மாமனார் வாங்கிய 4 கிரைய ஆவணத்தின் படி 1 ஏக்கர் 90 ¾ செண்ட் விஸ்தீரணம் என்று சொன்னால் பத்திரப்படி எவ்வளவு வருகிறதோ அதை எனக்கு ஒதுக்கீடு செய்யுங்கள் என்று சொல்கிறேன். 1 ஏக்கர் 90 ¾ செண்ட்டில் 25 செண்டை என் மாமனார் முத்துசாமிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். என் மாமனார் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்த சொத்து என்பதால் முத்துசாமிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 4 முதல் 8 பிரதிவாதிகள் சொத்தையும் சேர்த்து பரிகாரம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி அவருக்கு சொந்தமான சொத்துகளை 3 ம் நபருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றும் அது தெரிந்தே அந்த கிரையத்தின் பேரில் நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் குடும்பத்தார் மீது அடிதடி வழக்கு தாளவாடி காவல் நிலையத்தில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. என் கணவரும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் என் மாமனார் கிரயம் வாங்கிய சொத்தை தனிபட்ட முறையில் அனுபவித்து வந்து அதனை மறைத்து விட்டு பல வருடங்கள் கழித்து பொய்யான விவரங்களை தெரிவித்து துர்லாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் தாக்கல் செய்த இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.